**தலைப்பு – 127 – தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

பகுதி I - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

பகுதி II - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி 1

**தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களம் |
| --- | --- |
| 221 | தொழில் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 2,090,495,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 1,952,287,990 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்பு முறையே ரூபா 26,368,672 தொகையாகவும் ரூபா 111,838,338 தொகையாகவும் அதாவது தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதமாகவும் 06 சதவீதமாகவும் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீண்டெழுபவை | மூலதனம் | சேமிப்பு தேறிய ஏற்பர்டின் சதவீதமாக மீண்டெழு பவை | மூலதனம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 127 | 229,590,000 | 203,221,328 | 26,368,672 | 11 |
| 221 | 1,860,905,000 | 1,749,066,662 | 111,838,338 | 06 |
| மொத்தம் | 2,090,495,000 | 1,952,287,990 | 138,207,010 | 07 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாரளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்குரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான மீதிகள் பினவருமாறாகும்.

| | செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| விடய இல. | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 12701 | 6,500,000 | 5,733,267 | 2,000,000 | 5,858,481 | 21,000,000 | 14,246,263 |
| 22101 | 98,000,000 | 54,009,983 | 45,000,000 | 54,244,759 | 248,000,000 | 234,594,466 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்கு

### 2.3.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்குகளின் மீதி ரூபா 606,911,372 தொகையாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இல | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 7002/0000/00/0249/0013 | 21,203 |
| தொழில் திணைக்களம் | 7002/0000/00/0060/0013 | 606,890,169 |
| கூட்டுத்தொகை | | 606,911,372 |

### 2.3.2 பொது வைப்புக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,289,725,189 ஆக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 6000/0000/00/0015/0040/000 | 4,696,701 |
| | 6000/0000/00/0015/0175/000 | 15,579,325 |
| தொழில் திணைக்களம் | 6000/0000/00/0015/0102/000 | 2,268,750,640 |
| | 6000/0000/00/0003/0035/000 | 387,228 |
| கூட்டுத்தொகை | 6000/0000/00/0006/0029/000 | 311,295 |
| | | 2,289,725,189 |

## 2 ஆம் பகுதி

### ஒவ்வொரு தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு – 127 – தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும்

நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இங்கே (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி , கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |

### (ஆ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 210,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 49 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 6 சதவீதத்திலிருந்து 87 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சைக் கொண்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 12701 விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்திற்கான அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 145,897 தொகையானதுடன் அந் நிலுவை மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொடர்பான காலப்பகுப்பாய்வு இணக்கக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கடன்வழங்கல் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பேணப்பட வேண்டிய கடன் மற்றும் முற்பணம் தொடர்பான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிப் பட்டியலின் கணக்கு மீதி ரூபா 479,260 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) அறவிடப்பட வேண்டிய ரூபா 259,309 தொகையான கடன் மீதியின் தனியான மீதி பட்டியலில் உள்ளடக்கப்பட்டிராமையால் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கிலிருந்து விடுபட்டிருந்தது.

(vi) 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 268,256 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(vii) தற்போது சேவையில் இல்லாத உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 09 கடன் மீதிகளுக்குரித்தான ரூபா 556,069 தொகையான நிலுவைக் கடன் முற்பணம் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

அமைச்சிற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிராததுடன் பதில் கடமையாற்றும் அடிப்படையில் தொழில் திணைக்கள கணக்காளர் ஒருவர் உள்ளகக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறெனினும், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்குரித்தான உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்து முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2014 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் அமைச்சு அலுவலகம் மற்றும் சாரதி அறையில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 மே 31 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 757(2) மற்றும் 1647(அ) இன் பிரகாரம், அமைச்சிடமுள்ள சகல வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நடைமுறையற்ற சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கைக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி 2013 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாகக் கருதப்பட்டிராமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரண மீதி ரூபா 690,969 ஆலும் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரண மீதி ரூபா 917,669 ஆலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) 2012 ஆம் ஆண்டின் போது கைதவிர்க்கப்பட்ட 06 வாகனங்களுக்குரித்தான சொத்துக் கைதவிர்ப்புப் பெறுமதியாக விற்பனைப் பெறுமதியான ரூபா 4,052,000 தொகை சொத்துக்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் கிரயப் பெறுமதியில் சொத்துக் கணக்கு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------

அமைச்சிடமிருந்து ஆறு வாகனங்கள் முறையற்ற விதத்தில் வெளித் தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) வேறு நிறுவகத்திடமுள்ள சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்

------------------------------------------------------------------------------------------------------------------------

தொழில் திணைக்களத்தின் இரு மோட்டார் வாகனங்கள் ( கார் மற்றும் வான்) முறையான அங்கீகாரமின்றி அமைச்சால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

**------------------------------------**

அமைச்சால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகளின் மீதி ரூபா 3,601,719 ஆகக் காணப்பட்டதுடன் அம் மீதி ஒரு வருடத்திலும் குறைவானவையாகக் காணப்பட்டன. மேற்குறித்த பொறுப்புகளுக்கு மேலதிகமாக 07 செலவின விடயங்களில் ரூபா 657,167 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

2013 நவம்பர் 23 ஆம் திகதிய மற்றும் ஒக்டோபர் 14 ஆம் திகதிகளில் இரு தடவைகள் விபத்திற்குள்ளான ஒரு வாகனம் மற்றும் 2013 மார்ச் 21 ஆம் திகதியும் திசெம்பர் 03 ஆம் திகதியும் விபத்திற்குள்ளான இரு வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் பூர்வாங்க அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயலாற்றல்

2013 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி, அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(i) 2013 ஆம் ஆண்டின் போது 474 நட்ட ஈட்டுக் கோரல்கள் நிறுவகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவற்றில் 85 குறித்த படிவத்தில் கோரப்பட்டிராமையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது மொத்த நட்ட ஈட்டுக் கோரல் எண்ணிக்கையில் 18 சதவீதமாகும். தொழிலாளர்களால் முறையற்ற விதத்தில் அறிக்கையிடப்பட்ட விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக உதவ வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நட்டஈடு ஆணையாளர் அலுவலகத்திற்கு விபத்து அறிவிக்கப்படுவது குறித்த படிவத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இது குறித்து அதிகாரச்சட்டத்தால் குறிப்பிடப்படும் ஊழியர்கள் போது தொழில் வழங்குனர்களையும் அறிவூட்டுவதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஸ்ரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கை எய்துவதற்காக இலக்குகளைக் குறித்திராததுடன் முக்கிய செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருந்த சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

| அதிகாரச்சட்டத்தின் பந்தி | மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள் |
|---|---|
| 6 (உ) | நெருக்கடியான சந்தர்ப்பங்களின் போது தொழில் தருனர்களுக்கோ அல்லது அவர்களில் தங்கியிருப்போருக்கு நிதி மற்றும் ஏனைய நலன்களை வழங்குதல். |
| 13(1) | ஒவ்வொரு ஆண்டுகளின் போது அச்சிடப்பட வேண்டிய அதிஷ்ட இலாபச்சீட்டுக்களின் எண்ணிக்கை மற்றும் வகை தொடர்பாக லொத்தர் சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வருதல். |
| 13(2) | அதிஷ்ட இலாபச்சீட்டிழுப்பின் மூலம் வழங்கப்படும் பரிசுகள் மற்றும் உரிமை கோரப்படாத பரிசுகள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட விதம் குறித்து லொத்தர் சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வருதல். |
| 13(3) | அதிஷ்ட இலாபச்சீட்டிழுப்பின் மூலம் வழங்கப்பட வேண்டிய பரிசுகளின் பெறுமதி உள்ளடங்கலாக லொத்தர் சபையால் ஏற்கப்பட வேண்டிய செலவினம் தொடர்பான நிதிக்கு லொத்தர் சபையுடன் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தல். |
| 10(ஈ) | அதிஷ்ட இலாபச்சீட்டிழுப்பின் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம் நிதியத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய போதிலும் 2008 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் அவ் வருமானம் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிராமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பெற வேண்டிய வருமானம் ரூபா 229,456,751 ஆகக் காணப்பட்டது. இப் பணம் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுவதற்காக அமைச்சால் ஆண்டின் போது ஆக்கபூர்வமான நடவடிக்கை |

எடுக்கப்பட்டிராததுடன் குறித்த பணம் பயன்படுத்தப்படுவது தொடர்பாக எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கவுமில்லை.

**(ஆ) திட்டமிடல்**

வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க செயற்படாமை

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(i) 2013 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை எய்துவதற்கு முடியாதிருந்த 44 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. செயல்நடவடிக்கைத் திட்டத்தினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 100 சதவீதம் மேற்கொள்ளப்படாத 21 விடயங்கள் காணப்பட்டன.

(ii) மேலும் 23 விடயங்கள் மேற்கொள்ளப்படாமை 09 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் இலக்குகளை எய்துவது நலிவான நிலையில் காணப்பட்டது.

**1.8 வங்கிக் கணக்குச் செயற்பாட்டிலான குறைபாடுகள்**

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சால் பேணப்பட்ட நடைமுறைக் கணக்குகளுக்காக 2013 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான விபரத்தின் படி, 06 மாதங்களுக்கு மேற்பட்ட 1 வருடத்திற்குக் குறைவாக தேறாத வைப்புகள் ரூபா 1,890 ஆகக் காணப்பட்டன.

**1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டிருந்தன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் போது நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தால் நட்டஈடு செலுத்தப்படுவதற்காக ரூபா 21,000,000 தொகையும் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 8,451,502 தொகையுமாக ரூபா 29,451,502 கூட்டுத்தொகையான கட்டுநிதி திறைசேரியிடமிருந்து கோரப்பட்டிருந்தது. எனினும், திறைசேரி 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 16,300,000 தொகையை மாத்திரமே வழங்கியிருந்தது.

(ஆ) விபத்துக்களின் மூலம் உயிரிழந்த தொழிலாளர்களில் தங்கிவாழ்வோருக்கு நட்டஈடு செலுத்தப்படுகையில் உரிமை தொடர்பான சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது நட்டஈட்டுத் தொகையை வழங்கும் நிறுவகத்தால் குறித்த நட்டஈட்டுத்தொகை நட்டஈட்டு ஆணையாளர் நாயகத்தின் பெயரிலான நடைமுறைக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட வேண்டும். இத் தொகையால் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தின் மீண்டெழும் செலவினங்கள் தீர்க்கப்பட்டிருந்ததுடன் அக் கணக்கில் பணம் இல்லாத காரணத்தால் குறித்த உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

## 1.10 நட்டங்களும் இழப்புகளும்

------------------------------------------------

ஆண்டின் போது இரு வாகனங்களுக்கு நேர்ந்த முழுமையான நட்டம் ரூபா 146,141 தொகையானதுடன் காப்புறுதி நட்டஈடாக ரூபா 62,209 தொகை மாத்திரமே கிடைக்கப்பெற்றிருந்தது. இதன் படி, ரூபா 83,932 தொகையான அரசாங்கத்திற்கு நேர்ந்த நட்டம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.11 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

--------------------------------------------------------------------

ஸ்ரம வாசனா நிதியத்தின் நீதிச் சேவைத் தீர்மான முறைமையை பிரசுரிப்பதற்காக பத்திரிகை விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 169,680 தொகை செலவிடப்பட்டிருந்தது. பத்திரிகை விளம்பரத்தையடுத்து ரூபா 10,000 படி நீதிச் சேவையை வழங்குவதற்காக ஐந்து ஊழியர்கள் தகைமைகளைப் பெற்றிருந்தனர். இதன் படி, செயற்திட்டத்தால் வழங்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நலன்களின் அளவைப் பார்க்கிலும் 239 சதவீதம் குறித்த விளம்பரத்திற்காகச் செலவிடப்பட்டிருந்தது. நீதிச் சேவையை வழங்குவது, சகல படிப்பணங்களுடன் ரூபா 15,000 இற்கு மேற்படாத சம்பளத்தைப் பெறும் தொழிலாளிகளுக்கு மாத்திரம் மேற்கொள்ளப்படுவதனால் மீளாய்வாண்டின் போது நீதிச் சேவையைக் கோரியவர்களின் எண்ணிக்கை 16 ஆகக் குறைவடைந்திருந்தது. தற்போதைய

சம்பள அளவுத் திட்டத்தைக் கருத்திற்கொள்கையில் இச் சம்பள எல்லையின் செல்லுபடித் தன்மை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய தன்மையாகக் காணப்பட்டது.

## 1.12 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 வரையிலும் 18 வயதைப் பூர்த்திசெய்த 353 நலன்பெறுனர்களுக்கு ரூபா 6,609,032 தொகையான நட்டஈட்டுத் தொகை செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பராயமடையாதவர்களின் கணக்கு உரிமையாளர்களின் 668 கணக்குப் புத்தகங்கள் தொடர்பான கோவைகளில் 201 கோவைகள் காணாமற் போயிருந்தன. கோவைகள், கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் பாதுகாப்பு தொடர்பாக அமைச்சின் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1934 இன் 19 ஆம் இலக்க தொழிலாளி நட்டஈட்டுக் கட்டளைகள் அதிகாரச்சட்டம் 2005 ஏப்ரல் 21 ஆம் திகதிய 10 ஆம் இலக்க தொழிலாளி நட்டஈட்டு (திருத்தல்) அதிகாரச்சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்டிருந்தது. இங்கு தொழிலாளியின் இறப்பு, நிரந்தர ஊனம் மற்றும் தற்காலிக ஊனம் காரணமாக நட்டஈடு செலுத்தும் விதம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் படி, செலுத்தப்படும் ஆகக் குறைந்த நட்டஈட்டுத்தொகையைத் தீர்மானித்து 09 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நடைமுறைக்கு இசைவாக செலுத்தப்படும் நட்டஈட்டுத்தொகை திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பராயமடையாதவர்கள் முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 18 வயதைப் பூர்த்தி செய்த 353 நட்டஈட்டுப் பெறுனர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 6,609,032 தொகையான நட்ட ஈட்டுத்தொகை நலனாளிகளுக்குச் செலுத்தப்படுவதற்கு 2014 சனவரி 14 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக் கணக்கு மீதி 1982 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலமாக நிலவிவரும் செலுத்தப்படாத மீதியாகும்.

(உ) நியதிச் சட்ட நிதியான ஸ்ரம வாசனா நிதிய அதிகாரச்சட்டத்தின் நோக்கத்தின் பிரகாரம், நிதியத்தின் நலன் நாடெங்கிலும் சேவையில் ஈடுபட்ட சகல ஊழியர்களுக்கும் பெறவேண்டிய போதிலும், நலன்களில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு கொழும்பு மாவட்டத்தில் சேவையில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

## 1.13 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 10 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 71 | 54 | 17 |
| (iv) | ஆரம்ப நிலை | 31 | 24 | 07 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 120 | 92 | 28 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

அமைச்சால் மீளாய்வாண்டின் போது வேறு தரப்பினர்களுக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| (i) | அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் iii ஆம் தரம் | 06 | 02 ஆண்டுகள் |
| (ii) | சாரதி | 01 | 04 ஆண்டுகள் |
| (iii) | சாரதி | 01 | 02½ ஆண்டுகள் |

## 2. தலைப்பு 221 – தொழில் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தொழில் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தொழில் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (ஊ) வரையிலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 2.1 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் |
| --- | --- |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நுகர்வுப் பொருள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647 |
| கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

| | |
|---|---|
| முறைப்பாட்டுப் பதிவேடு | தொழில் தருனர் பிரிவினால் 2013 ஆம் ஆண்டில் கிடைத்த 45 முறைப்பாடுகள் பதிவேடொன்றில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| வைத்திய அறிக்கை விண்ணப்பப் பதிவேடு | தொழில் தருனர் பிரிவினால் ஆண்டின் போது 90 வைத்திய அறிக்கை விண்ணப்பங்கள் பதிவேடொன்றில் பதியப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

---------------------------------------------------------------------------

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவொன்றிற்கு 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 4,886,313 ஆகும்.

(இ) பாதீட்டு முரண்

--------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 01 செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,000 மொத்தத் தேறிய ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 43 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

(iii) ஊழியர் சேமலாப நிதியத்தில் மீளளிப்புச் செய்யப்பட்ட பணம் ஒதுக்கீட்டுக் கணக்கில் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

* ‘‘மெகவர பியச’’ நிர்மாண ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ரூபா 448,000,000 தொகையான முற்பணம் செலவினமாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

* தொழில் திணைக்களத்தால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் இலங்கை மத்திய வங்கியிலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 865,437,221 செலவினமாக கருதி ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த செலவினம் ஊழியர் சேமலாப நிதியத்திலும் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

* இலங்கை மத்திய வங்கியினால் நிதியேற்பாடு செய்யப்பட்ட நிதி வருமானமாக ரூபா 835,833,541 தொகை 20.05.99.00 வருமானத் தலைப்பிலும், ரூபா 25,811,889 தொகை 20.03.02.99 வருமானத் தலைப்பிலும் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கட்டுநிதிக் கணக்கு
------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை திணைக்களத்திற்கு தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,715,120 ஆக இருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 371 இன் படி செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 112 சந்தர்ப்பங்களின் போது 57 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,021,717 தொகை செயற்பாடுகள் பூர்த்தியடைந்து 01 மாதம் முதல் ஒருவருடமும் 02

மாதங்களுமான கால தாமதத்தின் பின்னரும் உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உரியவாறு திட்டமிடப்படாமல் செயற்பட்டமையினால் 16 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 120,738 தொகையான முற்பணங்களிலிருந்து 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சிலான அளவில் செலவிடப்படாமல் மீளத் தீர்க்கப்பட்டிருந்தது.

(iv) திணைக்கள கட்டுநிதிக் கணக்கின் மீதி திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 808,212 தொகையான வரவு மீதியான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் குறிப்பிடப்பட்ட கூற்றின் பிரகாரம் ரூபா 2,171,444 தொகை இனங்காணப்படாத செலவு மீதியாக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2014 மே 12 ஆந் திகதி வரையிலும் அந்த மீதியை இனங்கண்டு அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2013 நவம்பர் 18 ஆந் திகதிய 04/2013 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டில் மீதி குறிப்பிடப்பட்டு ரீஓடீ/ஐஎம்பீ/06 படிவம் பூரணப்படுத்தப்பட்டு வங்கிக்குக் கையளித்து வங்கியிலிருந்து கிடைக்கின்ற வரவுக் கட்டளையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று ரீஓடீ/ஐஎம்பீ/06 படிவத்துடன் 2014 சனவரி 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் தொழில் திணைக்களத்தினால் அந்த செயற்பாடுகள் 2014 சனவரி 03 ஆந் திகதி ரூபா 206,220,118 தொகையும், 2014 சனவரி 10 ஆந் திகதி ரூபா 500,000 தொகையும் ஆகக் குறிப்பிடப்பட்டு வரவுக் கட்டளை மற்றும் படிவங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

(உ) பொது வைப்புக் கணக்கு

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 351,492 தொகையான 82 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2011 ஒக்தோபர் 31 ஆந் திகதிய SA/AS/MS/5/22/10 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனையின்படி ஊழியர் சேமலாப நிதியத்தின் வெளியீடுகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் வெளியீடுகளின் விற்பனை வருமானமான ரூபா 19,416,481 தொகை அந்த ஆலோசனைகளுக்கு முரணாக 6000-0-0-15-102 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(iii) 60000/0000/00/0015/0102/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான காலப்பகுப்பாய்வின் படி மீதி ரூபா 102,956,261 தொகையாக இருந்ததுடன் ஒதுக்கீட்டுக் கணக்கில் பொது வைப்புக் கணக்கின் மீதியாக ரூபா 2,268,750,640 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,165,794,379 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(iv) 60000/0000/000/0003/0035/000 ஆம் கணக்கு இலக்க பொது வைப்புக் கணக்கில் குறிப்பிடப்பட்ட ரூபா 387,228 தொகையான மீதிக்குரிய பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 60000/0000/000/0003/0035/000 ஆம் இலக்க கணக்கில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பேரேட்டின் பிரகாரம் மீதி ரூபா 50,249,872 ஆக இருந்ததுடன் திறைசேரி கணனி அச்சிடல் குறிப்புக்களின் படி மீதி ரூபா 387,228 ஆக இருந்தது. அதன் படி வேறுபாடு ரூபா 49,862,644 ஆக இருந்தது.

(vi) 60000/0000/000/0006/0029/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் (குடிவரவு நிதியம்) ரூபா 311,295 தொகையான மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் பல வருடங்காலமாக அந்தக் கணக்கில் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 22101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,080,492 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகைள அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டில் தொழில் திணைக்களத்தின் இடர்கடன் விண்ணப்பித்த 75 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6,890,305 தொகையான இடர் கடன் 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி கடன் விண்ணப்பித்த திகதி முதல் கடன் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 58 நாட்கள் முதல் 143 நாட்கள் வரையிலான வீச்சிலான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் நிதியேற்பாடுகளில் ரூபா 43,990,017 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஏற்பாடுகளில் 45 சதவீதமே கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

(iii) நிலுவைக் கடன் தொடர்பான காலப்பகுப்பாய்வின்படி 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழமையான நிலுவைக் கடன் மீதி ரூபா 1,277,020 தொகையும், 4 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான பழைய மீதி ரூபா 302,780 தொகையும், 3 வருடங்கள் முதல் 4 வருடங்கள் வரை பழைய மீதி ரூபா 23,535 தொகையும் காணப்பட்டன.

(iv) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் படி உத்தியோகத்தரொருவர் இடம்மாற்றலாகிச் சென்று 03 மாதங்கள் கடந்ததன் பின்னர் திணைக்களத்திற்கிடையே தீர்க்கப்படாத கடன் மீதி காணப்படாமையை கண்காணிக்க வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இடம்மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 777,476 ஆக இருந்தும் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 610,196.50 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 113,222 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்தது.

(v) தாபன விதிக்கோவையின் XXXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு இருக்கும் போது அந்தக் கடன் மீதியை தீர்க்காமல் உத்தியோகத்தர்கள் கூட்டுத்தாபன சேவைக்கு நிரந்தரமாக விடுவிக்கப்பட முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 60,495 நிலுவைக் கடனை அறவிடுவதற்குள்ள 11 உத்தியோகத்தர்களுக்கு கடன் அறவிடப்படாமல் கூட்டுத்தாபன சேவைக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் ஆண்டின் போது பின்வரும் துறைகள் தொடர்பில் போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

* கொள்வனவு
* நிலையான சொத்துக்கள்
* ஒவ்வொரு பிரிவினது/ அலுவலகத்தினது செயலாற்றல்
* களஞ்சியக் கட்டுப்பாடு
* மனித வள முகாமைத்துவம்
* உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை அபிவிருத்தி செய்தல்

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/ 01 ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின்படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான 93 வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்குரிய வாகன மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் 103(1), 104(1) மற்றும் 757(7) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தொழில் செயலகத்தின் கீழ் உள்ள மத்திய மாவட்ட தொழில் அலுவலகத்தில் உள்ள சிறிய நூலகங்களிலுள்ள 32 புத்தகங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 12,868,031 ஆகும்.

(ii) தென் கொழும்பு மாவட்ட தொழில் ஆணையாளர் அலுவலகத்தினால் நீதிமன்றத்தில் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு வழக்குத் தொடரப்பட்டு, நீதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்டு அனுப்பப்பட்ட பணம் மற்றும் பல்வேறு முறைபாடுகள் விசாரிக்கப்பட்டு முடிவுக்கு வந்த நேரடியாக அந்த அலுவலகத்திற்குக் கிடைத்த ரூபா 4,886,313 கூட்டுத்தொகை உரிய உரித்தாளிகளுக்கு வழங்கப்படாமல் நிறுவனத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட காலவீச்சு 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையாக இருந்தது.

**2.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | | இணங்காமைகள் |
|---|---|---|---|
| இலங்கை சநனாய சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (அ) இலங்கை சநனாய சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | (i) | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 753(1) | 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு திணைக்களத்தின் அச்சகத்திற்கு கையளிக்கப்பட்ட ரூபா 4,674,100 பெறுமதியான காகிதாதிகள், அச்சகத்தின் எந்த இருப்புப் பதிவேட்டிலும் பதியப்படாதிருந்ததுடன் அச்சிடல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட காகிதாதிகள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) | நிதிப் பிரமாணம் 1647(ஆ) | வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வொன்று வருடாந்தமும், ஒவ்வொரு வாகத்தினதும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கிடையே மாற்றடையும் போதும், வாகனத்தின் சாரதிகள் மாறுகின்ற போதும், மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக அந்த பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | நிதிப் பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | ஒவ்வொரு மாதத்தினதும் நாளாந்த ஓட்ட அட்டவணை அடுத்துவரும் |

| | |
|---|---|
| | மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய 48 குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கை

-----------------------------------------------

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதி 41/90 ஆம் இலங்கை சுற்றறிக்கை | திணைக்களத்திற்குச் சொந்தமான 40 வாகனங்களுக்கும் 6 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு தொடர்பான சுற்றறிக்கையின் ஆலோசனையின் படி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட்ட 13 வாகனங்களுக்காக சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக ஒவ்வொரு வாகனத்திற்காகவும் பல்வேறு அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டு எரிபொருள் லீற்றர் ஒன்றில் ஓடக்கூடிய கிலோமீற்றர் எண்ணிக்கை மாற்றப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. |

(இ) அரசாங்க நிதிச்சுற்றறிக்கை

--------------------------------------

| | |
|---|---|
| 2009 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | தொழில்சார் கொள்கைப் பிரிவில் 19 விடயங்களில் 206 அலுவலக உபகரணங்களும், 153 வகைகளில் 186 இரசாயன பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்களும், 05 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான கால |

| | | |
|---|---|---|
| | | இடைவெளியில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட உடைந்த பொருட்களை கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) தொழில் திணைக்கள சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| (i) | 2009 மார்ச் 05 ஆம் திகதிய 2009/3 ஆம் இலக்க சுற்றறிக்கை | அனைத்து தொழில் உத்தியோகத்தர்களும் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகார எல்லையினுள் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பில் பதிவேடுகளைப் பேணுவதற்காக தொழில் உத்தியோகத்தர்களுக்கு உதவி தொழிளாலர் ஆணையாளர்களுக்கு மற்றும் பிரதி தொழிலாளர் ஆணையாளர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் தெற்கு கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட குறித்த உத்தியோகத்தர்களால் அப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2007 ஒக்தோபர் 31 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க 4.1 ஆம் பந்தி | தெற்கு கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் தொழில் உத்தியோகத்தர்களால் பரிசோதனை அறிக்கைகளில் போதியளவிலான விபரங்கள் மற்றும் புள்ளிவிபரப் பதிவேடுகளுடன் கூடிய மாதிரிப் பத்திரங்கள் பயன்படுத்தப்பட்டிராததுடன் குறுகிய கால பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேலும் அந்நிலமை மேல் மட்ட உத்தியோகத்தர்களின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | 2007 ஒக்தோபர் 31 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1 மற்றும் 5.2 ஆம் பிரிவு | ஒவ்வொரு தொழில் உத்தியோகத்தராலும் பேணப்பட்டு வரும் தினக்குறிப்பேடுகள் அடுத்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் உதவி தொழில் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தெற்கு கொழும்பு தொழில் அலுவலகத்தில் 08 உத்தியோகத்தர்களால் 58 சந்தர்ப்பங்களில் தினக்குறிப்பேடுகள் 05 முதல் 234 நாட்கள் கொண்ட வீச்சிலான காலதாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (iv) | 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 06/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | தெற்கு கொழும்பு தொழில் அலுவலகத்தினால் ஒவ்வொரு மாத முடிவிலும் அசாதாண தொழில் கொள்கைகள் தொடர்பிலான விபரங்கள் தொழில் ஆணையாளருக்கு (கைத்தொழில்கள் தொடர்பு) அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயலாற்றல்

--------------------

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் தொழில் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) போதியளவில் பூர்த்தியாக்கப்படாத பிரதான செயற்பாடுகள்

---------------------------------------------------------------------------------------------

தொழிலாளர் திணைக்களத்தின் சில செயற்பாடுகள் போதியளவில் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(i) 2007 ஒக்தோபர் 31 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க தொழில் திணைக்களச் சுற்றிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில் உத்தியோகத்தரொருவரால் மாதமொன்றிற்கு குறைந்தபட்சம் 20 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும் தெற்கு கொழும்பு தொழில் அலுவலகத்தில் 07 தொழில் உத்தியோகத்தர்களால் 2013 சனவரி மாதம் முதல் ஒக்தோபர் மாதம் வரையிலான காலப்பகுதியிலுள் 20 இற்கும் குறைவான காலரீதியான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட 111 சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இந் நலிவு தொடர்பில் உதவி தொழில் ஆணையாளரிடம் காரணங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2007 ஒக்தோபர் 31 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க தொழில் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் தொழில் உத்தியோகத்தரால் அனைத்து பரிசோதனைகளுக்கும் உரிய அறிக்கைகள் பரீசீலனை திகதியின் பின்னரான முதலாவது அலுவலக நாளில் தவறாமல் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட வேண்டும். தெற்கு கொழும்பு தொழில் அலுவலகதின் 08 தொழில் உத்தியோகத்தர்களினால் 2013 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அறிக்கைகளை சமர்ப்பித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது 193 நிறுவனங்களின் பரிசோதனை அறிக்கைகள் காலமாதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

காலாதாமதமானது 11 நாட்கள் முதல் 189 நாட்கள் வரையான வீச்செல்லையை கொண்டிருந்தது.

(iii) 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய 06/2011 ஆம் இலக்க தொழில் திணைக்கள சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில் அலுவலகத்திற்கு வருகை தந்து 14 நாட்களுக்குள் பரிசீலனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும், தெற்கு கொழும்பு தொழில் அலுவலகங்களுக்கு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற 71 முறைப்பாடுகள் மற்றும் மனுக்களை விசாரணை செய்வதற்கு 2013 திசெம்பர் 03 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கைத்தொழிற்சாலைகள் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்களின் வேலைச் சூழலில் ஏற்படக்கூடிய அபாயகரமான நிலைமைகளை நீக்கி ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பேணப்பட வேண்டிய போதிலும், 25,000 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும், 2013 ஆம் ஆண்டில் சுற்றாடல் அளவை, உயிரியல் பரிசோதனை, தொழில் மற்றும் தொழில்சார் சுகாதார பாதுகாப்பு கணக்காய்வு மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டிலும் 695 நிறுவனங்களில் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. மேலும், நாடாளாவிய ரீதியில் 153 நிகழ்ச்சிதிட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(v) மாவட்ட கைத்தொழில்சாலைகள் பரிசோதகர் பொறியியலாளர் (கொழும்பு) அலுவலகத்தினால் 1942 ஆம் ஆண்டிலிருந்தான 72 வருட காலப்பகுதியினுள் 4,818 கைத்தொழிற்சாலைகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தன. பதிவு செய்யப்பட்டிருந்த கைத்தொழிற் சாலைகளில் 1,724 கைத்தொழிற்சாலைகள் அல்லது 35 சதவீதம் மாத்திரம் பரிசோதனை செய்யப்பட்டிருந்தன.

(vi) மாவட்ட கைத்தொழிற்சாலைகள் பரிசோதகர் பொறியியலாளர் (கொழும்பு) அலுவலகத்திற்கு மீளாய்வாண்டில் 05 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குனர்கள் நிறுவனம் தொடர்பில் உரிய அறிவூட்டலினை பெற்றுக்கொண்டிராமை இதற்கு காரணமாக அமைந்திருந்ததுடன்,

போதியளவிலான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு மீளாய்வாண்டினுள் விளைவுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 600 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட தனியார் நிறுவனமொன்றிற்குரிய முறைப்பாடொன்று தொடர்பிலான பரீசீலனை அறிக்கை கணக்காய்வு திகதி வரையிலும் 05 மாதங்கள் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய முறைப்பாடுகளின் பரீசீலனைகள் தொடர்பிலான பின்தொடர் நடவடிக்கைகள் திருப்திகரமான நிலைமையில் காணப்படவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

**------------------**

**வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படாமை**

**-----------------------------------------------------------------------------------------------------**

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(i) 2013 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை அண்மிக்க முடியாத 51 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அச் செயற்திட்டத்திற்காக ரூபா 45,245,000 தொகையான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச் செயற்பாடுகளில் 100 சதவீதமும் பூர்த்தி செய்யப்படாத 03 செயற்பாடுகள் காணப்பட்டதுடன், ஏனைய செயற்பாடுகளின் பூர்த்தி செய்யப்படாத செயல் முன்னேற்றம் 3 சதவீதம் முதல் 93 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(ii) தொழில்சார் சுகாதாரப் பிரிவினால் 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த 05 செயற்பாடுகளில் சுற்றுச்சூழல் அளவைகள் மற்றும் உயிரியல் விஞ்ஞான ஆய்வுகள் ஆகிய இரு செயற்பாடுகளுக்குரிய 397 நிகழ்வுகள் (Events) அல்லது வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் 50 சதவீதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.8 சிக்கனமான கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) ஹெயிடில்பர்க் - ஜிரிஓ 52 -1 வகை அச்சீட்டு இயந்திரமொன்றினை ரூபா 21,884,084 இற்கு கொள்வனவு செய்தல்

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2007 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் ரூபா 21,884,084 செலவிடப்பட்டு தனியார் நிறுவனமொன்றிடமிருந்து ஹெயிடில்பர்க் - ஜிரிஓ 52 -1 வகை அச்சீட்டு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள அச்சிட்டு இயந்திரங்களுக்கு தேவையான பதவியணிப் பயிற்சி, இயந்திரத்திற்கு தேவையான இடவசதி மற்றும் இயலுமை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாது இக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் 07 வருடங்களினுள் இயந்திரம் பராமரிப்பு கட்டணங்களாக கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு ரூபா 1,275,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) அச்சீட்டு இயந்திரம் கொள்வனவு செய்த தினம் முதல் அச்சீட்டுத்துறையில் திறமை மற்றும் அனுபவம் உள்ள ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2010 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தராக சேவையாற்றிய உத்தியோகத்தரொருவருக்கு இலங்கை அச்சீட்டு நிறுவகத்தின் ஒவ்செட் மற்றும் Lithography அச்சீட்டுப் பணிகள் தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறியொன்றிற்கு பங்குபற்ற வைக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த பயிற்சி உத்தியோகத்தர் மற்றும் எதுவித பயிற்சியொன்றினையும் பெற்றிராத அலுவலக உதவியாளர் சேவையின் இரு ஊழியர்களும்

கணக்காய்வு பரிசோதனையின்போது அச்சீட்டுப் பணிகளுக்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

(iv) தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த 30'X60' அளவான 1800 சதுர அடிகளுக்கு குறைவில்லாத தளமொன்று இவ் இயந்திரத்திற்கு தேவை என பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், 2009 யூலை மாதத்தில் இவ் இயந்திரம் ஜாவத்த கைத்தொழில் பாதுகாப்பு அலுவலகத்தின் பழைய வாகன கராஜ் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது.

(v) இயந்திரத்தின் தொழிற்பாடானது குளிரூட்டப்பட்ட சூழலிலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அதற்கான உரிய திட்டமொன்று இல்லாதிருந்ததுடன் அச்சீட்டு இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டுள்ள கட்டிடம் வாகன கராஜொன்றிற்கு பொருத்தமான முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக சுவர் மற்றும் கூரை அத்தோடு அத்திவாரமும் பல தொன்கள் பாரம் கொண்ட இயந்திரகூடமொன்றிற்கு பொருத்தமானதாகும். இவ் இயந்திர பாகங்கள் மழைக்காலங்களில் நீரில் நனைவதால் சேதமடைவதாக வெளிப்படுத்தப்பட்டது. மேலும் இவ் இயந்திரத்திற்கு ஏற்படக்கூடிய தீயினாலான நட்டங்கள் தொடர்பில் உரிய பாதுகாப்பு நடைமுறையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) 2014 பெப்ரவரி மாதமளவில் ரூபா 9,617,943 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் எதுவித பாவனைக்கும் எடுக்கப்பட்டிராததுடன் 2014 பெப்ரவரி 13 ஆந் திகதி கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ளும் போது அவ் இயந்திரங்கள் துறுப்பிடித்து செயற்பாடற்ற நிலமையில் காணப்பட்டது. மேலும், இவ் அனைத்து இயந்திர பாகங்களினதும் உத்தரவாத காலம் 2008 ஆம் ஆண்டில் நிறைவடைந்திருந்தது.

(vii) கொள்வனவின் பின்னர் இயந்திர உபகரணங்களில் அச்சீட்டு இயந்திரம் மற்றும் Paper Cutter (Guillotine) இயந்திரம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றின் பெறுமதி ரூபா 12,403,397 ஆக இருந்தது. கொள்வனவு செய்த வருடத்தின் பின்னர் 2010 ஆம் ஆண்டில் அச்சீட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆகிய வருடங்களில் இயலளவு முறையே 0.7 சதவீதம், 1.5 சதவீதம், 14.5 சதவீதம் மற்றும் 13 சதவீதம் போன்ற

அளவுகளில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த 04 வருடங்களில் இயலளவு 7.4 சதவீதமான அளவில் பாவனைக்குட்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையைக் கருத்திற்கொண்டால் இயலுமை கொண்ட ஒரு அச்சீட்டு இயந்திரம் போதுமாகவிருந்தது.

(viii) இவ் இயந்திரத்தின் இயலுமையின் அடிப்படையில் அச்சீட்டு நடவடிக்கைகள் 90mmx140mm அளவிலிருந்து 500mmx360mm வரை தாள்களில் செய்யக்கூடியதாக இருந்த போதிலும், இவ் இயலுமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த அச்சீட்டு இயந்திரம் 4 வர்ண அச்சீட்டு இயந்திரமொன்றானதுடன் கடந்த 06 ஆண்டுகளாக இதன் மூலம் வர்ண பிரதிகள் அச்சிடப்பட்டிருக்கவில்லை.

(ix) அரசின் ‘‘ஊ’’ வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும் தமது இணையதளப்பக்க வசதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளதுடன், தொழில் திணைக்களம் இந்த ‘‘ஊ’’ வேலைத்திட்டத்துடன் இணைந்து செயற்பட்டு இந்த மாதிரிப் பத்திர அச்சீட்டு கிரயத்தினை குறைப்பதற்கும் இதன் மூலம் மக்களுக்கு ஏற்படும் இலகுத்தன்மை தொடர்பிலும் திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(x) அச்சீட்டுத் தாள்கள் மற்றும் நிறமூட்டிகள் இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய அச்சீட்டுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு தேவையான களஞ்சிய வசதிகள் இல்லாதிருந்ததுடன் ரூபா 34,000 பெறுமதியான அச்சீட்டு தாள்கள் கரையான் அரிப்புக்குள்ளாகியிருந்தது.

## 2.10 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) தெற்கு கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தில் ரூபா 10,927,729 நிலுவைப் பங்களிப்புத் தொகை மற்றும் வருமானங்களை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை 02 அறிவித்தல் அனுப்பி 14 நாட்களுக்குள் குறித்த பணத்தினை செலுத்தாத நிறுவனங்களுக்கு இறுதி அறிவித்தல் வழங்காத 12 சந்தர்ப்பங்களும், ரூபா 22,877,423 நிலுவைப் பங்களிப்பு தொகை மற்றும்

வருமானத்தினை அறவிடுவதற்காக சிவப்பு அறவித்தல் அனுப்பப்பட்டு 14 நாட்களுக்குள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாத நிறுவனங்களுக்கான நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாத 16 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இவ்வாறு பங்களிப்புத்தொகை மற்றும் வருமானத்தினை அறவிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஊழியர்களுக்கு கிடைக்கவேண்டிய நலன்கள் இழக்கப்படும் அவதானமொன்று நிலவியது.

(ii) தெற்கு கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குரிய சேவை முன்மொழிவு நிறுவகங்களில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,921,534 நிலுவையான பங்களிப்பு தொகை மற்றும் வருமானங்களை அறவிடுவதற்காக எடுக்கப்பட்டிருந்த நீதிமன்ற நடவடிக்கைகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்த 14 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், பணிக்கொடை கொடுப்பனவு மற்றும் ஏனைய 07 வழக்குகளிலிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 866,910 இனை அறவிடுதல் தாமதமாகியிருந்தது.

(iii) தெற்கு கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலக அதிகார எல்லைக்குரிய தொழில் வழங்குனர் நிறுவகங்களின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய பங்களிப்புப் பணம் மற்றும் வருமானங்களை செலுத்தாமையால் குறித்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. எனினும் எதிர்த்தரப்பினர் வருகைத்தராத காணத்தால் மற்றும் பதிவினை மாற்றுதல் போன்ற காரணங்களால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,673,337 தொகையினை அறவிடுவதற்காக தொடுக்கப்பட்டிருந்த 20 வழக்குகள் தொடர்பில் 11/2000 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் 03(iii) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. திறந்த பிடியாணை தொடர்பிலான மும்மாத அறிக்கை சட்ட நடவடிக்கைப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தெற்கு கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலக பதிவேடுகளை நாளதுவரையாக பேணிச்செல்லாமை மற்றும் தெற்கு கொழும்பு மாவட்ட தொழிலாளர் அலுவலக அதிகார எல்லைக்குரிய 08 வலயங்களின் தொழில் வழங்குனர் தொழில் உத்தியோகத்தர்களிடையே சமமாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்காததன் காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்தை அறவிடல், ஊழியர் பணிக்கொடை அறவீடுகள் தொடர்பிலும் தொழில் உத்தியோகத்தர்களால் பரிசோதனைக்குட்படுத்தப்படாத நிறுவனங்கள் தொடர்பில் செயற்படல் மற்றும் கண்காணித்தல் ஆகியன உரிய வகையில்

மேற்கொள்ள முடியாமையால் தொழில் அலுவலகங்களில் நிறைவேற்ற வேண்டிய கடமைப்பாங்கிளை நிறைவேற்றுதற்கு கொழும்பு தொழில் அலுவலகம் தவறியிருந்தது.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | பற்றாக்குறை எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 205 | 120 | 85 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 667 | 432 | 235 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,486 | 1,185 | 301 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 443 | 432 | 11 | - |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 26 | - | 26 |
| | மொத்தம் | 2,801 | 2,195 | 632 | 26 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் 632 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த 26 மிகை ஊழியர்கள் தொடர்பில் முறையான அங்கீகாரமொன்றினை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) முறையற்ற விதத்தில் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனிதவளம்

-------------------------------------------------------------------------------------------------------------------

தொழிலாளர் திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் ஏனைய தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனிதவளம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்டிருந்த காலம் |
|---|---|---|---|---|
| (i) | தொழில் உத்தியோகத்தர் | 02 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 03 வருடங்கள் |
| (ii) | தொழில் உத்தியோகத்தர் | 02 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 02 வருடங்கள் |
| (iii) | மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 14 வருடங்கள் |
| (iv) | முகாமைத்துவ உதவியாளர் | 01 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 06 வருடங்கள் |
| (v) | முகாமைத்துவ உதவியாளர் | 01 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 12 வருடங்கள் |
| (vi) | முகாமைத்துவ உதவியாளர் | 01 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 09 வருடங்கள் |